2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.க.முத்துகிருஷ்ணன், த.பெ. (லேட்) இராசுதிரி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 05.02.2020 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் அவர்கள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அசா.எண்.3697/Q1/2022-1, நாள் 01.03.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அசா.கு. எண்.7337/G3/2022, நாள் 10.03.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ. சு. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள், சென்னை-35.
திரு.க.முத்துகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் (ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35. வழியாக).
மாநில கணக்காயர், சென்னை 18/18 (பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலகம்.

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் - மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரிப்படிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
17-3-22

சுருக்கம்

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - இளநிலை உதவியாளர் திரு.க. முத்துகிருஷ்ணன் த/பெ (லேட்) இரா. கதிரி இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்து ஆணை - வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (கா.ப.7) துறை

அரசாணை (டி) எண். 107 நாள் 15.03.2022
பிலவ வருடம், திருவள்ளுவர் ஆண்டு 2053, பங்குனி மாதம் 1ம் நாள்

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ1)துறை, நாள் 23.01.2020.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடித ந.க. எண். 15970/ஆர்3/2009, நாள் 29.12.2021

---

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், திண்டுக்கல் மண்டலம், பள்ளபட்டி கால்நடை மருத்துவமனையில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது 30.04.2008 அன்று மறைந்த திரு.இரா.கதிரி என்பவரது மகன் திரு.க.முத்துகிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரியலூர் மண்டலம், அரியலூர் (காப) உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, அவர் 05.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதால், அவருக்கு பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28 (2) விதியினை தளர்வு செய்து, தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 05.02.2020 மு.ப. முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.